# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் ● திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 16, 2026 Weekly E-paper ● May 16, 2026



# அது ஒரு நாளும் நிறைவேறாது!

சுப.வீரபாண்டியன்

## முதல் இடத்தில் வந்தே மாதரம், மூன்றாம் இடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தா?

எழில்.இளங்கோவன்

## முதலமைச்சர்...!

தலையங்கம்

## சனாதனம் ஒழிக்கப்பட்டும் பேரவையில் உதயநிதி ஸ்டாலின்!

முனைவர் காந்தி பாபு

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2057, - மே 16, 2026 Weekly E-paper • May 16, 2026


# அது ஒரு நாளும் நிறைவேறாது!

சுப.வீரபாண்டியன்

திரும்பும் திசை எங்கும் குழப்பங்கள் நிலவும் காலகட்டத்தை நாடு இப்போது பார்த்துக் கொண்டிருக்கிறது!

பெட்ரோல், டீசல் விலை கூடியிருக்கிறது. தங்கத்தின் விலை கூடிக்கொண்டே போகிறது. சோதனைகள் என்ற பெயரில் பல்வேறு சித்திரவதைகளை நடத்தி முடித்த பிறகு நடைபெற்ற நீட் தேர்வு செல்லாது என்றும், மீண்டும் தேர்வு நடத்தப்படும் என்றும் அறிவிப்பு வெளிவந்திருக்கிறது!

ஒன்றே ஒன்று மட்டும் சரிந்து கீழே வந்திருக்கிறது. ஆம், இந்திய ரூபாயின் மதிப்பு இதுவரையில் காணாத வகையில் சரிந்து, ஒரு டாலருக்கு 96 ரூபாய் என்று ஆகியிருக்கிறது. பெட்ரோல், டீசல் விலை கூடுவது என்பது, மிகத் தேவையான பொருள்களின் விலைகளும் விரைவில் கூட இருக்கின்றன என்பதற்கான முன்னறிவிப்பு!

இந்தியாவின் நிலை இது என்றால், தமிழ்நாட்டின் அரசியல் நிலையோ மிகுந்த குழப்பத்திற்கு உள்ளாகி இருக்கிறது!

அதிமுக என்னும் கட்சி அழிந்து கொண்டிருக்கிறது என்பதைவிட, திட்டமிட்டு அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதே உண்மை!

மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் இல்லாத நிலையில், கொறடாவினுடைய ஆணை மீறப்படுமானால், அவர்கள் மீது கட்சித் தாவல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதே விதி! ஆனால் 47 அதிமுக சட்டமன்ற உறுப்பினர்களில், 25 பேர் மட்டுமே கொறடாவின் ஆணையை மீறி, தவெக விற்கு ஆதரவாக வாக்களித்துள்ளனர். இது முற்றிலுமான விதிமீறல்! ஆனால் சபாநாயகர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. காரணம், கொறடா யார் என்பது இன்னும் முடிவாகவில்லை என்கிறார்!



இரண்டு குழுவில் இருந்தும் கடிதங்கள் வந்திருப்பதால், யார் கொறடா என்பதை முடிவு செய்ய முடியவில்லை என்கிறார்.

இது என்ன நியாயம்? கட்சியின் பொதுச் செயலாளர், சட்டமன்றக் குழு உறுப்பினர்களால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டவர் எவரோ, அவர் சொல்வது தானே இறுதியாக இருக்க முடியும்!

திட்டமிட்டுச் சதி வேலைகள் நடைபெறுகின்றன. அதன் தொடக்கமாகத்தான் எடப்பாடியாரைச் சந்திக்காமல், முதலமைச்சர் அந்தக் கட்சியின் ஒரு குழுவினரைச் சென்று சந்தித்தது என்பது நமக்குப் புரிகிறது!

இங்கே பொம்மைகள் சுழல்கின்றன. பொம்மலாட்டத்தை நடத்துகின்றவர்கள் யார் என்று நமக்குத் தெரியும்! அதிமுகவை மட்டும் அழிப்பது அவர்கள் நோக்கமில்லை. திராவிட இயக்கத்தை அழிப்பதுதான் அவர்களின் முழுமையான நோக்கம்.

அது ஒரு நாளும் நிறைவேறாது!

•

# முதல் இடத்தில் வந்தே மாதரம், மூன்றாம் இடத்தில் தமிழ்த்தாய் வாழ்த்தா?

எழில். இளங்கோவன்

தமிழ்நாட்டின் புதிய அரசின் முதல்வராக விஜய் பொறுப்பேற்ற நிகழ்ச்சியில் 'தமிழ்த்தாய்' வாழ்த்துக்குப் பதிலாக 'வந்தேமாதரம்' என்ற பாடல் முதலில் பாடப்பெற்றுள்ளது. இதற்கு எதிர்ப்புகள் எழுந்தவுடன் இது 'தவறுதலாக' நடந்துவிட்டது என்று அமைச்சர் பொறுப்பில் இருக்கும் ஆதவ் அர்ஜுனா பொறுப்பற்ற முறையில் கூறியிருக்கிறார்.

அரசு விழாக்களில் முதலில் வந்தேமாதரம் பாடவேண்டும் என்ற வழிகாட்டு நெறிமுறைகளை 2026 பிப்ரவரி மாதம் ஒன்றிய அரசு வெளியிட்டு இருந்தது ஆதவ் அர்ஜுனாவுக்குத் தெரியாதா? இதை தமிழ்நாட்டின் தற்போதைய ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் சொன்னவுடன் அதையேற்று முதல்வர் பதவி ஏற்பு நிகழ்ச்சியில் வந்தேமாதரம் பாடல் பாடப்பெற்றது என்று வெளிப்படையாகச் சொல்லாமல் 'தவறுதலாக நடந்துவிட்டது' என்று சொல்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. முந்தைய திமுகழக அரசு கொள்கை அளவில் ஒன்றிய அரசின் வழிகாட்டலை ஏற்கவில்லை, தமிழ்த்தாய் பாடலைத்தான் முதன்மைப் படுத்தியது.




1876 ஆம் ஆண்டில் சமஸ்கிருதத்தில் பக்கிம் சந்தர் சாட்டர்ஜி என்ற பார்ப்பனரால் எழுதப்பட்ட வந்தேமாதரம் பாடல், 1882 ஆம் ஆண்டில் வெளிவந்த அவரின் வங்காள மொழியின் 'ஆனந்தமடம்' நாவலில் இடம்பெற்றது. இந்த நாவல் முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு எதிரான மதவெறுப்பை, கிளர்ச்சியை, வன்முறையைப் பின்னணியாகக் கொண்டது. இதில் வந்தே மாதரம் பாடல் வாங்காள இந்துக்கடவுளான 'காளி' 'துர்கா' 'ஜெகத்தாத்ரி' ஆகிய தெய்வங்களை (வங்காள) நாட்டின் அன்னையாகப் போற்றி வணங்க வேண்டும் என்று சொல்கிறது. இஸ்லாமிய ஏகத்துவத்திற்கு மாறாக இருப்பதால் அப்பாடலை இஸ்லாமியர்கள் ஏற்கவில்லை, ஆனால் ஏற்கவேண்டும் என்றனர் இந்துத்துவ ஆதரவாளர்கள்.

1938 இல் முகமது அலி ஜின்னா தலைமையிலான முஸ்லீம் லீக் கட்சி, இந்தப் பாடல் முஸ்லீம் எதிர்ப்புப் பாடலாகவும், இந்து மதத் திணிப்பாகவும் இருப்பதாகக் கூறி, அதைத் தேசிய கீதமாக ஏற்க மறுத்தது. வந்தேமாதரம் பாடலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த அரவிந்த கோஷ் "வங்கத்தின் தேசிய கீதம்" என அதற்குப் பெயரிட்டார். சுபாஷ் சந்திர போஸுக்கு எழுதிய கடிதத்தில், ரவீந்திரநாத் தாகூர் "வந்தே மாதரத்தின் மையக்கரு துர்கா தேவிக்கான ஒரு துதியாகும். இது மிகவும் தெளிவானது, இதில் எந்த விவாதத்திற்கும் இடமில்லை. நிச்சயமாக, பக்கிம் சந்தர் இறுதியில் துர்கா வங்காளத்துடன் பிரிக்க முடியாதபடி இணைந்திருப்பதாகச் சொல்கிறார்" என்று வந்தேமாதரத்தை ஆதரிக்கும் அவர் "எந்தவொரு முஸ்லிமும் பத்துக் கைகள் கொண்ட தெய்வத்தை சுதேசமாக (தேசமாக) நாட்டுப்பற்றுடன் வழிபடுவார் என்று எதிர்பார்க்க முடியாது" என்றும் எழுதியிருக்கிறார். 1915 ஆம் ஆண்டுகளில் இப்பாடலை முழுமனதுடன் ஏற்றுக்கொண்ட காந்தியடிகள் 1940 ஆம் ஆண்டில் இதில் இஸ்லாமிய வெறுப்பு இருப்பதை ஏற்றுக்கொண்டார்.

1909 ஆம் ஆண்டு அமிர்தசரசில் கூடிய அகில இந்திய முஸ்லிம் லீக் 2 ஆம் அமர்வில் சர் சையத் அலி இமாம், "நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று என்னால் கூற முடியாது, ஆனால் இந்தியாவின் மிகவும் முன்னேறிய மாகாணம், வந்தே மாதரம் என்ற பிரிவினைவாத முழக்கத்தை தேசிய முழக்கமாகவும், பிரிவினைவாதம் ஒரு தேசிய அனுசரிப்பாகவும் முன்வைப்பதைக் காணும்போது, என் இதயம் விரக்தியாலும் ஏமாற்றத்தாலும் நிரம்புகிறது; மேலும், தேசியம் என்ற போர்வையில் இந்தியாவில் 'இந்து தேசியம்' போதிக்கப்படுகிறது என்ற சந்தேகம் உறுதியான நம்பிக்கையாக மாறுகிறது" என்று பேசியிருக்கிறார்.

"இந்து ராஷ்டிரத்திற்கான கனவுதான் வந்தே மாதரம்"என்கிறார் நாடாளு மன்றத்தில், தி.மு.க துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா.

"பக்கிம் சந்தரரின் சிந்தனையில் கருக்கொண்டது இந்து வங்காள தேசம்தான். தேசம் என்பது அவரைப் பொறுத்தவரை ஓர் இந்து வங்காளி சமூகம்தான். எனவே அவருடைய தேசிய உணர்வை வங்காள முஸ்லிம்கள் பகிர்ந்து கொள்ளாமல் இருந்ததில் வியப்பில்லை" என்கிறார் எஸ்.வி.ராஜதுரை.

அரசியலமைப்புப் பிரிவு 25இன்கீழ் மத சுதந்திரத்தையும், பிரிவு 19 இன்கீழ் கருத்து சுதந்திரத்தையும் உறுதி செய்கிறது என்ற வாதம் இஸ்லாமியர்களால் முன்வைக்கப்படுகிற நிலையில், வந்தே மாதரம் பாடலை முதல் பாடலாகவும், தமிழ்த்தாய் வாழ்த்தைப் பின்தள்ளி மூன்றாம் பாடலாகவும் தவெக அரசு நிகழ்வில் பாடியிருப்பது வன்மையான கண்டனத்திற்கு உரியது, தமிழ்நாடு ஏற்றுக் கொள்ளாது.

தமிழராய் வேர் பிடி ! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## முதலமைச்சர்...!

எப்படியோ ஆட்சிக்கு வந்துவிட்டார் விஜய். இன்று அவர்தான் முதலமைச்சர். சட்டமன்றநிகழ்வுகளின்போது அவரை ஒரு முதலமைச்சராகப் பார்க்கிறார்கள்.

சட்டப்பேரவையில் முதலில் மக்கள் பிரச்சனைகளைப் பேசவேண்டும்.

எதிர்கட்சித் தலைவர், உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அங்கேயே பதில் சொல்ல வேண்டும்.

எதிர்கட்சித் தலைவர் உதயநிதி அவர்களின் பேச்சுக்கு, பேரவையிலேயே பதில் சொல்லாமல் வீட்டுக்குப் போய் X தளத்தில் பதில் சொல்வது முதல்வருக்கு உரிய தகுதி ஆகாது.

கஜானா காலியாக இருக்கிறது என்று பேசிய சிறிது நேரத்தில் கஜானாவில் என்ன இருக்கிறது என்று இனிதான் பார்க்க வேண்டும் என்று சொல்வதில் முரண் இருக்கிறது. தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்வதுபோல 'பணம் இருக்கிறது. மக்களுக்குக் கொடுக்க மனமும், ஆட்சித்திறனும் வேண்டும்' என்பதை கவனத்தில் முதல்வர் எடுத்துக்கொள்ள வேண்டும்.

மகளிருக்கு மாதம் 2,500 ரூபாய், ஆண்டுக்கு ஆறு சிலிண்டர், வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு மாதம் 4,000 ரூபாய் என்று ஆட்சிக்கு வர அள்ளிவீசிய வாக்குறுதிகளை விரைவில் நிறைவேற்றுவார் முதல்வர் விஜய் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இதற்கு ஜோசியக் காரர்களை அரசின் பக்கத்தில் வைத்து சோதிடம் பார்க்க மாட்டார் முதல்வர், என்று நம்புவோமாக.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்:
வெற்றிச்செல்வன்
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408

# பேரவைத் தலைமைக்குழுத் தீர்மானங்கள்




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் தலைமைச் செயற்குழுக் கூட்டம் 10-05-2026 ஞாயிற்றுக் கிழமை சென்னை, கோடம்பாக்கம் படைப்பகம் அரங்கில் நடைபெற்றது. கூட்டத்திற்குப் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் சிற்பி செல்வராசு, பொருளாளர் செல்வின் முன்னிலை வகிக்க, அமைப்புச் செயலாளர் எட்வின் தொகுப்புரையாற்றினார். இக்கூட்டத்தில்,

1) பக்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய ஆனந்த மடம் நாவலில் இடம் பெற்றுள்ள இஸ்லாமியர்களுக்கு எதிரான வந்தே மாதரம் பாடலை இன்று நடைபெற்ற முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில் முதலாவதாகவும், தமிழ்த்தாய்வாழ்த்தினை மூன்றாவதாகவும்பாடியுள்ளனர். இஸ்லாமிய மக்களுக்கு எதிராகவும் தமிழ் மொழியை அவமதிக்கும் வகையிலும் நடைபெற்றுள்ள இந்நிகழ்வை, பேரவை கடுமையாகக் கண்டிக்கிறது.

2) தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்து ஏற்கனவே வெளிப்படையாக கடந்த அரசு தெரிவித்திருக்க, பல வாக்குறுதிகளை அன்று அள்ளிக் கொடுத்துவிட்டு, தமிழ்நாடு அரசின் நிதி நிலையைச் சரிபார்த்த பின்புதான் அவற்றை நிறைவேற்ற முடியும் என்று புதிதாகப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சர் இன்று அறிவித்திருப்பது மக்களை ஏமாற்றுவதாக உள்ளது. இப்போக்கினை மாற்றிக்கொண்டு கொடுத்த வாக்குறுதிகளை தமிழ்நாடு அரசு நிறைவேற்றிட வேண்டும் என்று பேரவை வலியுறுத்துகின்றது.

3) பி எம் ஸ்ரீ என்ற பெயரில் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பாஜக அரசின் சூழ்ச்சியை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிப்பதோடு, தமிழ்நாடு அரசு எந்தச் சூழலிலும் பி எம் ஸ்ரீ திட்டத்தை ஏற்கக் கூடாது எனவும் இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

4) திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் பொதுக்குழு 19-07-2026 அன்று சென்னையில் நடைபெறும் என்று நான்கு தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப் பட்டன. நன்றி நவிலலுடன் கூட்டம் நிறைவுற்றது.

# சனாதனம் ஒழிக்கப்படட்டும் பேரவையில் உதயநிதி ஸ்டாலின்!

**முனைவர் காந்தி பாபு**

திராவிட முன்னேற்றக் கழக வரலாற்றில், சட்டமன்றம் என்பது கூடிக்கலையும் கேளிக்கைக் கூடமல்ல. மக்கள் பிரச்சினைகளை தீர்க்கவும், மாநில உரிமைகளை மீட்டெடுக்கவும், விவாதங்கள் அரங்கேறும் போர்க்களமாக அது இருந்தது. அப்போர்க்களத்தில், இன்று திராவிட இயக்கத்தின் முன்கள வீரனாக நின்று , தமிழ்நாட்டு மக்களின் குரலாக, திராவிட இயக்க முரசமாக எதிரொலித்தது, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முழக்கம்!




"எதிர்கட்சித்தலைவர் பதவிக்கு ஏன் இந்த உதயநிதி?" என்று கேட்டவர்களுக்கு, இன்றைய சட்டமன்ற உரை நெற்றிப்பொட்டில் அடித்தார் போல் விடையளித்திருக்கிறது.

“மக்களைப் பிரிக்கும் சனாதனம் நிச்சயமாக ஒழிக்கப்படும்” என்று உறுதிபடக்கூறிய அவர் எதற்கும் அஞ்சாத, எவரையும் பணியாத அந்தத் துணிச்சல், கொள்கை வழிநின்ற உறுதி, அவர் ஐயா பெரியாரின் *'Bloodu'* என்பதை மீண்டும் உறுதிப்படுத்தியது .

ஆட்சியிலிருந்தபோது எப்படி "மக்களுக்கான அரசு" என்று திமுக பெயர் பெற்றதோ, அதேபோல் இன்று எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்து "மக்களின் பாதுகாப்பு அரணாக" திமுக வீரியத்தோடு செயல்படும் என்ற உதயநிதியின் இன்றைய உரை, அவர் அறிஞர் அண்ணா *'Bloodu'* என்பதைப் பறைசாற்றியது.

எங்கள் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவோடு ஆட்சியமைத்துள்ள புதிய அரசிற்கு வாழ்த்துகள் என்று கூறியதோடு , சட்டமன்றத்தில் "நாங்கள் சீனியர், எங்கள் அனுபவத்தைஅறிவைஉங்களுக்குப்பகிர்ந்துகொள்கிறோம். நீங்கள் எங்களைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று ஆளுங்கட்சிக்கு விடுத்த வேண்டுகோள் அவரின் அரசியல் முதிர்வையும்,

மாநில உரிமையைப் பாதுகாக்கவும், மக்கள் விரோதத் திட்டங்களைச் சட்டமன்றத்தின் வாயிலிலேயே தடுத்து நிறுத்தவும் வல்ல ஆற்றல் மிக்கப் படையாக திமுக செயல்படும் என்ற அறைகூவல் அவர், தலைவர் கலைஞர் *'Bloodu'* என்பதை அறுதியிட்டுக் கூறியது.

புதிய அரசின் பதிவியேற்பு விழாவில் வந்தே மாதரம் பாடலுக்கு முதலிடம் தந்து தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றமிடத்துக்கு தள்ளியதை கடுமையாகக் கண்டித்ததோடு இனியும் இது போல் தொடர்ந்தால் நாங்கள் விடமாட்டோம் என அரசுக்கும் முதல்வருக்கும் எச்சரிக்கை விடுத்தும் ஆளும் அரசின் மெத்தனத்தைச் சுட்டிக்காட்டியும், ஆளுங்கட்சியைத் தடுமாறச் செய்த ஆளுமைத் திறன் அவர் தளபதி ஸ்டாலின் *'Bloodu'* என்பதை வெளிப்படுத்தியது.

“எதிர்வரிசை என்பது எங்களுக்குப் புதியதல்ல. நெருப்பாற்றில் நீந்திப் பழகியவர்கள் நாங்கள்! கருப்பு சிவப்புக் குருதி எங்கள் உணர்வுகளில் ஓடிக்கொண்டிருக்கும் வரை, தமிழ்நாட்டின் உரிமைகளை எவர் தட்டிப் பறிக்க நினைத்தாலும், அந்த முயற்சியைச் சட்டமன்றத்தில் திமுக சிதறடிக்கும்.” என்ற கர்ஜனை , மொத்தத்தில் சட்டமன்றத்தை அதிரச் செய்யும் வீரியம் மிக்க ஆளுமையாக உதயநிதி ஸ்டாலின் வலம் வருவார் என்பதை உலகுக்கு உணர்த்தியது.